ஜனாதிபதி உரை:

## ஒன்றிய அரசின் தோல்விகளை மறைக்கிறது!

### இந்திய கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜன. 30 –

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டி.ராஜா எக்ஸ் தளத்தில் நேற்று முன்தினம் பதிவிடுகையில், நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி திரவுபதி முர்மு ஆற்றிய உரை, நாடு எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சினைகளைத் தொடத் தவறிவிட்டது. அதில் எந்த ஒரு பொருள் மற்றும் பொறுப்புக்கூறல்களும் இல்லை. மோடி அரசாங்கத்தின் தோல்விகளில் இருந்து கவனத்தைத் திசை திருப்ப, ஜனாதிபதியின் உயர்ந்த அரசியலமைப்பு அந்தஸ்து ஒரு கேடயமாக பயன்படுத்தப்படுகிறது.

மணிப்பூர் கலவரம், ஜம்மு காஷ்மீரில் ஜனநாயக நடைமுறைகள் இன்னும் சீரான நிலைக்கு வரவில்லை. டெல்லி செங்கோட்டை வெடிகுண்டு தாக்குதல், கேரளா மற்றும் இதர மாநிலங்களை பொருளாதார ரீதியாக நசுக்குவது உள்ளிட்ட பிரச்சினைகள் உரையில் இடம் பெறவில்லை. இது அரசாங்கத்தின் தோல்விகளை மறைக்கிறது என இந்திய கம்யூனிஸ்ட் எம்.பி. சந்தோஷ்குமார் தெரிவித்துள்ளார்.

யு.ஜி.சி. விதிகள்: அமைப்பு ரீதியான குறைகளை களையும் வகையில் திருத்தி

# முறையான நடவடிக்கைகளை எடுத்து செயல்படுத்த வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை. ஜன. 30 -

**உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவ ஊக்குவிப்பு தொடர்பான யு.ஜி.சி. விதிகள் 2026-யை வரவேற்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்த விதிகளை மேலும் முறையாக வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், அதில் உள்ள அமைப்பு ரீதியான குறைகளைக் களையும் வகையில் திருத்தி அமைக்க வேண்டும் என்றும் முறையாக நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பாக முதலமைச்சர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

UGC (உயர்கல்வி நிறுவனங்களில் சமத்துவ ஊக்குவிப்பு) விதிகள், 2026 தாமதமான நடவடிக்கை என்றாலும், பாகுபாட்டிலும், நிறுவனங்களின் அக்கறையின்மையிலும் தோய்ந்துபோன உயர்கல்வி அமைப்பினைச் சீர்ப்படுத்துவதை நோக்கிய வரவேற்கத்தக்க நகர்வாகும்.

ஒன்றிய அளவில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து, இந்திய உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் தற்கொலைகள், குறிப்பாகப் பட்டியல், பழங்குடியின மாணவர்களின் தற்கொலைகள் அதிகரித்திருப்பது கண்கூடு. மேலும், தென்னிந்திய மாநிலங்கள் - காஷ்மீர் - சிறு பான்மைச் சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களைக் குறிவைத்து மீண்டும் மீண்டும் தாக்குதல் சம்பவங்களும் தொல்லைக்குள்ளாக்குவதும் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில், சமத்துவப் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்பவை தவிர்க்க முடியாத கட்டாயமாகும். அதில் இரு வேறு கருத்துக்கு இடமிருக்க முடியாது.

**மைய நோக்கங்களை நீர்த்துப் போகச் செய்யக் கூடாது!**

யு.ஜி.சி. புதிய விதிகளில் சாதியப் பாகுபாட்டை ஒழிப்பதும், அச்சட்டத்துக்குள் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதும் ஆதரிக்கத்தக்கது. மண்டல் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் இட ஒதுக்கீட்டை அமல்படுத்தியபோது போராட்டம் நடத்திய அதே பிற்போக்கு மனநிலையுடன் தான் யு.ஜி.சி. விதிகளுக்கு எதிரான தற்போதைய போராட்டங்களும் அமைந்துள்ளன. இத்தகைய அழுத்தங்களுக்கு ஆட்பட்டு, ஒன்றிய அரசு இந்தப் புதிய விதிகளையோ அல்லது அவற்றின் மைய நோக்கங்களையோ நீர்த்துப் போகச் செய்யக் கூடாது.

ரோகித் வெமுலா அவர்களின் தற்கொலை போன்ற வழக்குகளில், துணைவேந்தர்கள் மீதே குற்றம் சாட்டப்பட்டிருந்த நிலையில், யு.ஜி.சி. புதிய விதிகளின்படி உயர்கல்வி நிறுவனத் தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் தலைமையிலேயே சமத்துவக் குழுக்களை அமைத்தால் அவை எப்படி சுதந்திரமாகச் செயல்பட முடியும் என்ற கேள்வி எழுகிறது. அதுவும் பல உயர்கல்வி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பில் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கும்போது இக்கேள்வி மேலும் வலுவடைகிறது.

மாணவர்களின் தற்கொலைகளைத் தடுப்பது, பாகுபாடுகளை முடிவுக்குக் கொண்டு வருவது, பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களின் இடைநிற்றலைக் குறைப்பது ஆகியவற்றில் ஒன்றிய பா.ஜ.க. அரசு உண்மையாகவே தீவிரமாக இருந்தால், இந்த விதிகளை மேலும் வலுப்படுத்துவது மட்டுமில்லாமல், அதில் உள்ள அமைப்புரீதியான குறைகளைக் களையும்வகையில்திருத்தியமைக்க வேண்டும். முறையாக நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் செயல்படுத்திட வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி பதிவிட்டுள்ளார்.

## S.I.R.: தமிழ்நாட்டுக்கு மேலும் 10 நாட்கள் நீட்டிப்பு!

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜன. 30 -

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க தமிழ்நாட்டுக்கு மேலும் 10 நாட்கள் அவகாசம் வழங்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டது. வாக்காளர்கள் பட்டியலில் பெயர் சேர்க்க இன்றுடன் அவகாசம் நிறைவடையும் நிலையில் மேலும் 10 நாட்கள் அவகாசம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தி.மு.க. தொடர்ந்த வழக்கில் எஸ்.ஐ.ஆர். பட்டியலில் பெயர் சேர்க்க மேலும் 10 நாள் அவகாசம் வழங்க உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. விடுபட்டவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்ட நாட்களில் இருந்து 10 நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். மூலம் 97.37 லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டு வரைவு வாக்காளர் பட்டியல் வெளியானது.

எஸ்.ஐ.ஆர் பணிகளுக்கு பின் வெளியான வரைவு வாக்காளர் பட்டியலில் 97.38 லட்சம் பேர்



நீக்கப்பட்டிருந்தனர். 6.41 கோடியாக இருந்த தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை எஸ்.ஐ.ஆர் பணிக்கு பின் 5.43 கோடியாக குறைந்தது.

ஜனவரி 18ம் தேதியுடன் முடிவடைந்த பெயர் சேர்ப்பு பணியை ஜனவரி 30 வரை நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. புதிதாக வழங்கப்பட்ட படிவங்கள் சரிபார்க்கப்பட்டு பதிவேற்றி பிப்ரவரி 17இல் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியாகும்.

நே.சிற்றரசு – மேயர் பிரியா ராஜன் – அன்பகம் கலை – பூச்சி முருகன் – துறைமுகம் காஜா – எஸ்.மதன்மோகன் பங்கேற்பு;

# கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் திராவிட பொங்கல் - கிரிக்கெட் போட்டி!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – பி.கே.சேகர்பாபு சிறப்புரை; அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. அறிவிப்பு!

சென்னை, ஜன.30-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் நாளை (31.01.2026 சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் சென்னை மண்டலத்திற்குட்பட்ட கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் நிர்வாகிகளுக்கு இடையேயான திராவிடப்பொங்கல் கிரிக்கெட் போட்டி, அண்ணா சாலை, மதறாஸ் இ ஆசாம் ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள, (SDAT) விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின், முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கத்தின், TURF மைதானத்தில், பதினாறு அணிகள் பங்கேற்கும் மாபெரும் கிரிக்கெட் போட்டி மற்றும் பெண்கள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டி ஆகியவை நடைபெறவிருக்கின்றது என அணியின் செயலாளரும், மத்திய சென்னையின் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:

திராவிட பொங்கலை மாவட்டங்கள் வாரியாக கொண்டாடிட வேண்டும் என கழகத்தலைவர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின்படி, கழக விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் சென்னை மண்டல விளையாட்டு மேம்பாட்டு அணியின் நிர்வாகிகளுக்கிடையேயான மாபெரும் கிரிக்கெட் போட்டி மற்றும் பெண்கள் பங்கேற்கும் கிரிக்கெட் போட்டியும் சென்னையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியின் துவக்க விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளரும் பணிகள் நிலைக்குழவின் தலைவருமான நே. சிற்றரசு, சென்னை பெருநகர மேயர் திருமதி பிரியா ராஜன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலையச் செயலாளர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் பூச்சி எஸ் முருகன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தலைவர் துறைமுகம் காஜா, சேப்பாக்கம் பகுதிக் கழகச் செயலாளரும், 9வது மண்டலத் தலைவருமான எஸ். மதன் மோகன், வட்டச் செயலாளர் . பிராபகரன் உள்ளிட்ட கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்.

இவ்விழாவில் சென்னை மண்டலப் பொறுப்பாளர் செல்வி. நிவேதா ஜெசிக்கா வரவேற்புரையாற்றுகின்றார், கழக விளையாட்டு அணியின் மாநிலத்துணைச் செயலாளர்கள், எஸ் ஆர் பார்த்திபன், தனுஷ் எம் குமார், சுரேஷ் ஜெ மனோகரன், ஏ.வி.ஆர்.கோபால் ராம், எஸ். கார்த்திக், வே. கௌதமன், வாசிம் முபாரக், வழக்கறிஞர் பி.கே. பாபு, திருவரங்கம் என். ஆனந்த், இஷ்ரத் ஆகியோர் இந்நிகழ்விற்கு முன்னிலை வகிக்கின்றார்கள் என அணியின் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி தெரிவித்துள்ளார்.

பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி. – எஸ்.முரளி தலைமையில்

# மயிலை மேற்கு-கிழக்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. – கோவி.லெனின் பங்கேற்பு!

சென்னை, ஜன. 30-

இதுகுறித்து பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி. - எஸ்.முரளி ஆகியோர் அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு-கிழக்கு பகுதி கழக ஆலோசனை கூட்டம் இன்று 30.01.2026 வெள்ளிக்கிழமை மாலை 6.00மணி அளவில் மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகத்தில் பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம்.சி. - எஸ் முரளி ஆகியோர் தலைமையில் நடைபெறகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த வேலு மற்றும் மாநில தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் - தொகுதி பார்வையாளர் கோவி.லெனின் ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் மயிலை மேற்கு - கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஜி.ஆர்.ராஜேந்திரன், ஆர்.எல்.வி.அசோக்குமார், பா.பாக்கியதாஸ், அகல்யா விசுவநாதன், ஜி.முருகையன், எஸ்.முனுசாமி, சீமான் கோ.சேகர், பி.எல்.தாஸ், ஏ.குமாரி, எல். உதயகுமார்,

வட்டக் கழக செயலாளர்கள் டி.ராஜவேலு, சீ .கிருஷ்ணமூர்த்தி, அ.நாகராஜன், எஸ்.ஆர்.ராஜா சுரேஷ்குமார், மு.இ.ஏழுமலை, மூ.ராஜேந்திரன், ஏ,தாஸ், மா.பா.அன்பு, ஆ. தவனேசன், வி.வெற்றிவேல், கோ .கண்ணன், துரைபார்த்திபன், பா.பொன்னுசாமி மற்றும் மயிலை தொகுதிக்குட்பட்ட மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம் மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி தொகுதி, வெள்ளியூர் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 11ம் வகுப்பு படிக்கும் 88 மாணவ மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதிவண்டிகளை சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி வழங்கினார் அருகில் ஒன்றிய செயலாளர் புஜ்ஜி டி.முரளிகிருஷ்ணன் எம்.பர்கத்துல்லாகான் டி.தென்னவன், டி.மனோகரன், மதுரைவீரன், விமலாகுமார், டி.பிராங்க்ளின், எஸ்.வேலு தலைமை ஆசிரியை டி.ஆனந்தி, மேலாண்மை குழு தலைவர் வி.கிருஷ்ணவேணி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் பி. தசரதன், ஹரிகிருஷ்ணன், கபிலன், பாலாஜி, ஜெஸ்டின், தசரதநாயுடு, ரூபன், வசந்தி, அஜித்குமார், யோகேஸ்வரன், மூர்த்தி, யுவராணி, ஜெயம்மாள், கிரிஜா, தேவி, தெய்வநிதி, ஆனந்தன், கமலதாசன், அன்புச்செழியன், குமார், லோகநாதன், பூபதி, முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள் மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் உள்ளனர்

கேரள மாநில தி.மு.க. முன்னாள் பொருளாளர்

# வடக்கந்தரை பிரேமன் மறைவு!

## கே.ஆர்.முருகேசன் – முன்னணியினர் அஞ்சலி!



திருவனந்தபுரம், ஜன.30-

கேரள மாநில தி.மு.க. முன்னாள் பொருளாளர் பிரேமன் அவர்கள் (வயது 83) வயது மூப்பு காரணமாக நேற்று முன்தினம் இரவு காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

பாலக்காடு மாவட்டத்தில் உள்ள வடக்கந்தரை என்ற இடத்தில் வசித்து வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு உடல்நலம் குன்றி காலமானார்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று நடைபெற்றது. பாலக்காடு மாவட்ட மூத்த உறுப்பினரும் தொ.மு.ச. மாநில துணை செயலாளரும் ஆன மாணிக்கம், பாலன், மஜீத் ஆகியோர் கேரள மாநில தி.மு.க. சார்பில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.


மறைந்த பிரேமன் அவர்கள் 2011 முதல் 2016 வரை கேரள மாநில தி.மு.க. பொருளாளராக பதவி வகித்தார்.

இச்செய்தியறிந்ததும் கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஆர்.முருகேசன் உள்ளிட்ட கழக முன்னணியினர், தோழர்கள் சென்று மறைந்த பிரேமன் அவர்களின் உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மாதவரம் தெற்குப் பகுதி –

# பகுதிப் பிரதிநிதி கோ.தயாளன் மறைவு!

## மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – கழக முன்னணியினர் அஞ்சலி!



சென்னை, ஜன.30

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்குப் பகுதி மகளிர் தொண்டணி துணை அமைப்பாளர் டி.கவிபிரியாவின் கணவரும், 30 (அ) வட்டம் பகுதிப் பிரதிநிதியுமான கோ. தயாளன் (வயது 62) உடல்நிலை குறைவு காரணமாக 28.1.2026 அன்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ். சுதர்சனம், பகுதி கழக செயலாளர் ஜி.துக்காராம், மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால், மாமன்ற உறுப்பினர் திருமலை துரைசாமி, புத்தகரம் ஏழுமலை, வட்டக் கழக செயலாளர் டி சுந்தரம், எம். சரவணன், மகேஷ், நரசிம்மன், இ.மோகன், லட்சுமி காந்தன், அசோக் குமார், எல்.ஜி. செல்வம், ஜே.ஜி.தசரதன், ஏசுராஜ், இராமன், ஸ்ரீ பரமேஸ்வரி, சக்கரபாணி, சீனிவாசன், ஏ. வி.முருகன், எஸ்.பி.கண்ணன், ஆர்.சுரேஷ், கௌதம், எஸ்.என். கோதண்டன், டாக்டர் ஜி.பார்த்தசாரதி, உமா மகேஸ்வரி, சுசிலா தியாகராஜன், மற்றும் பலர் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

79-வது நினைவு நாள்: எழும்பூர் அருங்காட்சியகத்தில் உள்ள

# உத்தமர் காந்தியடிகள் திருவுருவச் சிலைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஜன.30-

முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் உத்தமர் காந்தியடிகளின் 79வது நினைவு நாளான ஜனவரி 30 அன்று காலையில் எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் உள்ள அவருடைய திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உத்தமர் காந்தியடிகளின் 79வது நினைவு நாளை முன்னிட்டு, இன்று (30.1.2026) காலை 10.40 மணியளவில் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்துகிறார்.

உத்தமர் காந்தியடிகள் 1869-ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் குஜராத் மாநிலம் போர்ப்பந்தரில் கரம்சந்த் உத்தம்சந்த் காந்தி புத்லிபாய் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். 18 வயதில் பள்ளிப்படிப்பை முடித்து, இங்கிலாந்தில் சட்டப் படிப்பு பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்று வழக்கறிஞர் ஆனார்.

ஆப்பிரிக்க நாட்டில் இந்தியர் ஒருவருக்கு எதிரான வழக்கில் வாதாடச் சென்றார். அங்கு இந்தியர்களுக்கு எதிரான ஆங்கிலேய அரசின் அடக்குமுறை கொடுமைகளைக் கண்டித்துப் போராடினார். அப்போராட்டங்களால் இந்தியர்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தந்தபின் இந்தியா திரும்பினார்.

இந்தியாவில் கோபால கிருஷ்ண கோகலே, ரவீந்திரநாத் தாகூர் போன்றோரின் நண்பராகத் திகழ்ந்த உத்தமர் காந்தியடிகள் இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார்;

இதன் தொடர்ச்சியாக, இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தியாவில், இந்தியர்களால் தயாரிக்கப்படும் உப்புக்கு ஆங்கிலேயர்கள் வரி விதித்ததைக் கண்டித்து அகமதாபாத்திலிருந்து குஜராத் மாநிலத்திலுள்ள தண்டி கடற்கரை நோக்கி நீண்ட நடை பயணத்தைத் தொடர்ந்தார். தண்டி கடற்கரை வந்துசேர்ந்த பின்பு உப்பைத் தயாரித்து, ஆங்கிலேய அரசுக்கு எதிராகப் பகிரங்கமாகப் பொது மக்களுக்கு உப்பை விநியோகம் செய்தார். இந்நிகழ்வு வரலாற்றில் "உப்பு சத்தியாகிரகம்" என்று அழைக்கப்படுகிறது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்ற உத்தமர் காந்தியடிகள் "வெள்ளையனே வெளியேறு" போராட்டத்தில் பெரும் பங்கு வகித்தார். உத்தமர் காந்தியடிகள் 1921-ஆம் ஆண்டு மதுரைக்கு வந்தபோது, அங்குள்ள மக்கள் மாற்று உடை இல்லாமல் ஒரே ஆடையை அணிந்திருப்பதையும், பெரும்பாலான மக்கள் வேட்டி துண்டு அணிந்தியிருப்பதையும் கண்டார். அதனால் மனம் வருந்தி உத்தமர் காந்தியடிகள் அன்று முதல் ஆடம்பர உடைகளைத் துறந்து வாழ்வின் இறுதி நாள்வரை இடுப்பில் ஓர் ஆடையையும் தோளில் ஓர் ஆடையையும் அணிவதை மட்டுமே வழக்கமாகக் கொண்டார்.

அண்ணல் காந்தியடிகளின் தொண்டுகளையும் தியாகங்களையும் போற்றி வங்க மொழிக் கவிஞர் இரவீந்தரநாத் தாகூர் அவர்கள் உத்தமர் காந்தியடிகளுக்கு "மகாத்மா" எனும் பெருமைக்குரிய பட்டத்தை வழங்கினார்.

தமிழ்நாடு அரசு உத்தமர் காந்தியடிகளின் தியாகத்தைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் சென்னை கிண்டியிலும், கன்னியாகுமரியிலும் காந்தி மண்டபங்களைக் கட்டியுள்ளது.

உத்தமர் காந்தியடிகளின் புகழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் 15.8.2022 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியகத்தில் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச்சிலையை நிறுவித் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசின் சார்பில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உத்தமர் காந்தியடிகளின் 79 வது நினைவு நாளான 30.1.2026 அன்று காலை 10.40 மணியளவில் சென்னை, எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பொதுமக்கள் முன்னிலையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

ரமணி மாதவன் எம்.சி. தலைமை! நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. முன்னிலை!

# மதுரவாயல் 147 வது வட்டத்தில் விளையாட்டு திடல் உள்ளிட்ட 4 பணிகள்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்! எஸ்.ஜி.மாதவன் அறிக்கை!

சென்னை, ஜன. 30

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்குப் பகுதி, 147 வது வார்டில் இன்று (30.01.2026 வெள்ளிக்கிழமை) காலை 8.30 மணிக்கு, ஆலப்பாக்கம், தந்தை பெரியார் விளையாட்டு திடலை ரூபாய் 1.85 கோடி மதிப்பில் மேம்பாடு செய்திடவும்,

பெருமாள் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ரூபாய் 1.72 கோடி மதிப்பில் நான்கு புதிய வகுப்பறை கட்டிடம் கட்டுவதற்கும்,

பெருமாள் கோவில் தெருவில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் ரூபாய் 1.06 கோடி மதிப்பில் புதியதாக கட்டப்பட்ட மேடை அரங்கம், பள்ளி சுற்றுச்சுவர், கழிப்பறை வசதிகள் போன்ற சீரமைக்கப்பட்ட பள்ளி திறப்பு விழா,

ஆலப்பாக்கம் கங்கை அம்மன் கோவில் தெருவில் உள்ள கங்கை அம்மன் கோவில் குளத்தில் ரூபாய் 43.5 லட்சம் மதிப்பில் புதிய காரிய மேடை அமைக்கும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டல் நிகழ்வு நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிகளுக்கு 147 வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரமணி மாதவன் தலைமை வகிக்கிறார்.

வளசரவாக்கம். 11 வது மண்டலக் குழுத் தலைவரும், மதுரவாயல் வடக்கு பகுதிக் கழக செயலாளருமான நொளம்பூர் வே.ராஜன் முன்னிலை வகிக்கிறார்.

மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினரும், எம்.ஜி.ஆர். பல்கலைக் கழக ஆட்சி மன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி மேற்கண்ட நான்கு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கிறார்.

ஆகவே நமது 147 வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மகளிர் அணியினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு 147 வது வட்டக் கழக செயலாளர் மேனாள் கவுன்சிலர் மேட்டுக்குப்பம் எஸ்.ஜி.மாதவன் கேட்டுக்கொண்டுள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம்:4.49,வது வார்டில் தாம்பரம் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 20 லட்சம் ரூபாய் மாநகராட்சி பொது நிதி ரூபாய் 24 லட்சம் மெத்தம் 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முத்துரங்க பூங்காவில் சிறுவர்கள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் இறகு பந்து மைதானத்தை 4,வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் தலைமையில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ திறந்து வைத்தார். உடன் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி,5 வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர் உடன் மாமன்ற உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள்,வட்ட செயலாளர்கள்,மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் வி.தங்கதுரை மற்றும் பொதுமக்களும் பெரும் திரளாக பங்கேற்றனர் .